வியாழக்கிழமை , நவம்பர் 08, 2012

# தேசிய வாழை கருத்தரங்கில் நெல்லை விவசாயிகள் பங்கேற்பு

**நெல்லை,**

தேனியில் நடைபெற்ற தேசிய வாழை கருத்தரங்கில் நெல்லை விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## வாழை கருத்தரங்கு

தோட்டக்கலைத்துறை சார்பில் “தேசிய வாழை கருத்தரங்கு“ தேனியில் நடைபெற்றது. இதில் பங்கேற்று பயனடையும் வகையில் சேரன்மாதேவி, அம்பை, நாங்குநேரி வட்டாரங்களை சேர்ந்த 8 விவசாயிகள் அழைத்து செல்லப்பட்டனர். தோட்டக்கலை உதவி இயக்குனர்கள் தமிழ்வேந்தன், ராஜாசிங், தி.சு.பாலசுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர். தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்துறை ஆணையாளர் டாக்டர் சந்தோஷ்பாபு முன்னிலையில் நடைபெற்ற இந்த கருத்தரங்கில் வேளாண் விஞ்ஞானிகளும், மைய மற்றும் மாநில அரசின் உயர்மட்ட அலுவலர்கள், வங்கியின் உயர் அலுவலர்கள், வேளாண் இயந்திர வல்லுனர்கள், வேளாண் இயந்திர உற்பத்தியாளர்கள், இந்திய தொழில் நிறுவனங்களின் கூட்டமைப்பு நிறுவன உயர் அலுவலர்கள், ஏற்றுமதியாளர்கள், திசுவாழை உற்பத்தி மற்றும் நுண்ணீர் பாசன நிறுவனத்தினர் கலந்து கொண்டனர். அவர்கள் திட்டங்கள், கருத்துக்கள், அனுபவங்கள் ஆகியவற்றை வாழை விவசாயிகளுடன் பகிர்ந்து கொண்டனர்.

## விலை நிர்ணயம்

தரமான திசு வாழைக்கன்றுகளை தேர்வு செய்வதில் தொடங்கி ஒருங்கிணைந்த உர நிர்வாகம், ஒருங்கிணைந்த பூச்சிநோய் நிர்வாகம், அறுவடை நுட்பங்கள், அறுவடை பின்செய் நேர்த்தி என வாழை சாகுபடியின் அனைத்து அம்சங்களையும் வேளாண் விஞ்ஞானிகள் விளக்கினர். உரப்பாசனத்துடன்கூடிய சொட்டுநீர்ப்பாசனம் வாழையில் உயர்விளைச்சல் தருவது தொடர்பாக கருத்தரங்கில் அறிந்து கொள்ள முடிந்தது. விவசாயிகள் ஒருங்கிணைந்து செயல்பட்டு, தங்கள் விளைபொருட்களை தாங்களே விலை நிர்ணயம் செய்து விற்கும் வியாபாரிகளாக மாற கருத்தரங்கு உதவியாக இருந்தது. வாழையின் மதிப்பூட்டப்பட்ட பொருட்களை தயாரித்து விற்பது லாபகரமானது, அதிக லாபம் தரும் எற்றுமதிக்கான வாய்ப்புக்களையும், வழிமுறைகளையும் இக்கருத்தரங்கு உழவர் பெருமக்களுக்கு விளக்கியது.

## மானிய உதவி

மைய அரசின் உணவு பதப்படுத்துதல் துறை இணைச்செயலாளர் வெங்கடேஸ்வரலு வாழை பதனப்படுத்துதல் மற்றும் குளிர் சேமிப்பு போன்றவற்றுக்கு கோடிக்கணக்கில் மானிய உதவி வழங்கப்படுவதை எடுத்துக்கூறினார். உழவர் கூட்டமைப்புகளை ஏற்படுத்தி, அவற்றை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் கூறினார். பல்வகை ரக வாழைத்தார்களுடன் வாழை தொழில் நுட்பங்களை விளக் கும் வகையில் அமைக்கப்பட்டிருந்த கருத்துக்காட்சி கண்ணுக்கும், கருத்திற்கும் விருந்தாக அமைந்திருந்தது.
ஆங்கிலத்தில் பேசிய அறிஞர்களின் கருத்துக்களை அனைத்து விவசாயிகளுக்கும் புரியும்வகையில் பேராசிரியை சாலிகா மொழிபெயர்த்தார். சின்னமனூர் கிராமத்தில் வெளிநாடுகளுக்கு வாழைப்பழங்களை எற்றுமதி செய்யும் கருப்பையாவின் “பனானா பிரஷ்“ நிறுவன வாழை பதனக்கிடங்குகளை நம் விவசாயிகள் பார்வையிட்டனர்.

# திருப்பூர் மாவட்டத்தில் வேளாண்மை துறையில் ரூ.63 கோடியில் திட்டங்கள்

திருப்பூர்,

திருப்பூர் மாவட்டத்தில் வேளாண்மை துறையில் ரூ.63 கோடியில் திட்டங்கள் தீட்டப்பட்டு நடைபெற்று வருகிறது என்று அமைச்சர் எம்.எஸ்.எம்.ஆனந்தன் கூறினார்.

**ராபி முன் பருவ பயிற்சி முகாம்**

திருப்பூர் மாவட்ட வேளாண்மைத்துறை சார்பில் மாவட்ட அளவிலான ராபி முன் பருவ பயிற்சி முகாம் தொடக்க விழா திருப்பூர் பல்லடம் ரோட்டில் உள்ள லட்சுமி திருமண மண்டபத் தில் நடந்தது. விழாவுக்கு கலெக்டர் ஜி.கோவிந்தராஜ் தலைமை தாங்கினார். விழா வுக்கு வந்திருந்தவர்களை வேளாண்மை இணை இயக் குனர் முகமது கலிமுல்லா ஷெரீப் வரவேற்றார்.

மாவட்ட வருவாய் அதி காரி கஜலட்சுமி, மாவட்ட ஊராட்சி தலைவர் சண்முகம், திருப்பூர் ஒன்றியக்குழு தலை வர் சாமிநாதன், மண்டல தலைவர்கள் ராதாகிருஷ் ணன், கிருத்திகா, முத்து ஆகி யோர் சிறப்புரையாற்றினார் கள். பயிற்சி முகாமை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் எம்.எஸ்.எம். ஆனந்தன் தொடங்கி வைத்து விழா பேரூரையாற்றினார்.

**ரூ.63 கோடியில் திட்டங்கள்**

அப்போது அவர் பேசியதாவது:

தமிழக முதல்அமைச்சர் ஜெயலலிதா ஆட்சியில் தான் வேளாண்மைத்துறை துடிப் போடு செயல்பட்டு வருகிறது. முன்பு எந்த காலத்திலும் இல்லாத அளவுக்கு தற்போது வேளாண் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு உழவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். இந்த துறைக்கென 201213ம் நிதியாண்டில் ரூ.3 ஆயிரத்து 804 கோடியே 96 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து சரித்திர சாதனை படைத்துள்ளார்.

விவசாயிகளுக்கு தொழில் நுட்பம் மட்டும் இன்றி அனைத்து திட்டங்களிலும் 50 முதல் 100 சதவீதம் மானியங் கள் வழங்கப்படுகின்றன. இதன் தொடர்ச்சியாக தற் போது திருப்பூர் மாவட்டத் தில் வேளாண்மை துறைக்கு ரூ.8 கோடியிலும், தோட்டக் கலைத்துறைக்கு ரூ.10 கோடி யிலும், வேளாண் பொறியியல் துறைக்கு ரூ.14 கோடியிலும், வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறைக்கு ரூ.31 கோடியிலும் என மொத் தம் ரூ.63 கோடி அளவில் திட்டங்கள் தீட்டப்பட்டு நடைபெற்று வருகின்றன.

**208 பயனாளிகள்**

முதல்அமைச்சர் ஜெய லலிதா அறிவித்து உள்ள இரண்டாம் பசுமை புரட்சி திட்டத்தின் உன்னத நோக்கம் செயல்படுதற்கு அடிப்படை யான தொழில் நுட்பங்கள் விவசாயிகளுக்கு சென்றடை வதற்கு இதுபோன்ற பயிற்சி முகாம்கள், கருத்தரங்குகள் மற்றும் செயல்விளக்க கூட் டங்கள் நடத்தப்படுகிறது. எதிர்வரும் வடகிழக்கு பருவ மழையை பயன்படுத்தி அதிக பயிர் சாகுபடி பரப்பை உயர்த்தி சராசரி மகசூலை விட அதிக மகசூலை எடுக்கும் நோக்கத்தில் இதுபோன்ற திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு தேவையான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த விழாவில் உழவர் பாதுகாப்பு திட்டத்தில் 128 பயனாளிகளுக்கு ரூ.17 லட்சத்து 6 ஆயிரத்து 750 மதிப்பில் நலத்திட்ட உதவிகளும், வேளாண்துறை, தோட்டக் கலைத்துறை சார்பில் 80 பய னாளிகளுக்கு ரூ.2 லட்சத்து 68 ஆயிரத்து 370 மதிப்பில் நலத்திட்ட உதவிகளும் வழங்கப்படுகிறது.

இவ்வாறு அமைச்சர் எம்.எஸ்.எம்.ஆனந்தன் பேசினார்.

**கண்காட்சி**

இதைத்தொடர்ந்து பயனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை அமைச்சர் எம்.எஸ்.எம்.ஆனந்தன் வழங்கினார். முடிவில் வேளாண்மை துணை இயக்குனர் சந்தான கிருஷ்ணன் நன்றி கூறினார். முன்னதாக வேளாண்மை துறை சார்பில் அமைக்கப்பட்ட கண்காட் சியை அமைச்சர் எம்.எஸ்.எம்.ஆனந்தன் திறந்து வைத்து பார்வையிட்டார்.

# மரவள்ளிக்கிழங்கு பயிரில் ஊடுபயிராக மக்காச்சோளம் சாகுபடி ஒரு ஹெக்டேருக்கு ரூ.25 ஆயிரம் மானியம்

**ஈரோடு**

கடம்பூர் மலைப்பகுதியில் மரவள்ளிக்கிழங்கு பயிரில் ஊடுபயிராக மக்காச்சோளம் சாகுபடி செய்வதற்கு, ஒரு ஹெக்டேருக்கு ரூ.25 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது.

<u>ஊடுபயிர் சாகுபடி</u>

சத்தியமங்கலத்தை அடுத்துள்ளது கடம்பூர் மற்றும் குத்தியாலத்தூர் மலைப்பகுதி. இங்கு மானாவாரி நிலப்பகுதி அதிகமாக உள்ளது. இந்த நிலங்களில் மலைப்பகுதியில் உள்ள விவசாயிகள் மானாவாரி பயிராக ராகி, மரவள்ளிக்கிழங்கு ஆகியவற்றை அதிக அளவில் சாகுபடி செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் இந்த மலைப்பகுதி விவசாயிகளின் வாழ்க்கை தரம் உயர தமிழக அரசு தோட்டக்கலைத்துறை மூலம் புதிய திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இந்த திட்டத்தின் படி, மானாவாரி நிலத்தில் மரவள்ளிக்கிழங்கு பயிர் செய்து உள்ளவர்கள், அதில் ஊடுபயிராக தோட்டக்கலைத்துறை தேர்வு செய்த வீரிய மக்காச்சோள பயிர்களை சாகுபடி செய்யலாம்.

ரூ.25 ஆயிரம் மானியம்

இது குறித்து சத்தியமங்கலம் தோட்டக்கலை உதவி இயக்குனர் எம்.ஆர்.பழனிச்சாமி கூறும்போது, ‘கடம்பூர், குத்தியாலத்தூர் மலைப்பகுதியில் இது வரை மரவள்ளிக்கிழங்கு பயிரை விவசாயிகள் அதிக அளவில் சாகுபடி செய்து வந்து உள்ளார்கள். இதில் ஊடுபயிராக வீரிய மக்காச்சோளத்தை ஊடுபயிராக சாகுபடி செய்யலாம். இதற்கு ஒரு ஹெக்டேருக்கு மானியமாக ரூ.25 ஆயிரம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த திட்டத்திற்காக 50 ஹெக்டேரில் ஊடுபயிராக மக்காச்சோளம் சாகுபடி செய்வதற்காக ரூ.12 லட்சத்து 50 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது‘ என்றார்.

# வேளாண்மை அதிக விளைச்சல் தரும் வெண்டை சாகுபடி

**வேலூர்**

வெண்டையில் கோ–2, எம்.டி.யு–1 அர்கா அனாமிகா, பார்பானி கிராந்தி, பூசா சவானி, வர்சா உப்கார் ஆகிய ரகங்களும், கோ–3, யு.எஸ்.9–ஏ, ஆர்த்தி, வர்ஷா, எம்–10, எம்–12, விஜயா, விஷால் ஆகிய வீரிய ஒட்டு ரகங்களும் உள்ளன. வெண்டையை எல்லா வகை மண்ணிலும் பயிரிடலாம். நல்ல உரச்சத்துள்ள மண் வகைகளில் நன்றாக வளரும், கார அமில நிலையை ஓரளவு தாங்கி வளரும்.

**உரம் இடுதல்**

ஜூன் முதல் ஆகஸ்டு, பிப்ரவரி முதல் மார்ச் ஆகியவை பருவத்துக்கு உரிய மாதங்கள் ஆகும். விதையானது ரகங்களாக இருந்தால் ஏக்கருக்கு 3 கிலோவும், வீரிய ஒட்டு ரகங்களாக இருந்தால் 1.5 கிலோவும் விதைக்க வேண்டும். 3 முதல் 4 முறை நிலத்தை உழ வேண்டும். அடியுரமாக ஏக்கருக்கு 10 டன் தொழு உரமிட வேண்டும்.
வெண்டை விதைகளை விதைப்பதற்கு 24 மணி நேரத்துக்கு முன்பு கிலோவுக்கு 2 கிராம் கார்பண்டசிம் கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும். விதைப்பதற்கு முன்விதைகளை 400 கிராம் அசோஸ்பைரில்லம், ஆறிய அரிசி கஞ்சியுடன் கலந்து நிழலில் உலர வைக்க வேண்டும். 45 செ.மீ. இடைவெளியில் பார் அமைத்து 30 செ.மீ. இடைவெளியில் 2 விதைகள் வீதம் 2 செ.மீ. ஆழத்தில் ஊன்ற வேண்டும். 10 நாட்களுக்கு பின் நன்றாக உள்ள செடியை வைத்துக்கொண்டு மற்றதை களைத்துவிட வேண்டும்.

**உர தேவையை குறைக்கலாம்**

விதைத்த பின் வாரத்துக்கு ஒரு முறை நீர் பாய்ச்ச வேண்டும். சொட்டு நீர் பாசனம் அமைப்பது உன்னதமானது. அடியுரமாக ஏக்கருக்கு 8 கிலோ தழைச்சத்து தரக்கூடிய 18 கிலோ யூரியா, 20 கிலோ மணிச்சத்து தரக்கூடிய 125 கிலோ சூப்பர் பாஸ்பேட், 16 கிலோ சாம்பல் சத்து தரக் கூடிய 27 கிலோ மூரேட் ஆப் பொட்டாஷ் உரங்களை அடியுரமாக இட வேண்டும். விதைத்த 30 நாட்கள் கழித்து 8 கிலோ தழைச்சத்து தரக்கூடிய 18 கிலோ யூரியாவை மேலுரமாக இட வேண்டும். ஏக்கருக்கு 800 கிராம் அசோஸ்பைரில்லம், 800 கிராம் பாஸ்போ பாக்டீரிய உயிர் உரங்களை 20 கிலோ நன்கு மக்கிய

தொழு உரத்துடன் கலந்து மண்ணில் நேரடியாக இட்டு, தழை, மணிச்சத்து உரத்தேவைகளை குறைத்து கொள்ளலாம்.

<u>இலைவழி உரம் அளித்தல்</u>

ஒரு லிட்டர் நீருக்கு 10 கிராம் யூரியா கலந்து பெறப்பட்ட, ஒரு சதவீத யூரியா கரைசலை விதைத்த 30–ம் நாள் முதல் 10 நாட்கள் இடைவெளியில் 3 முறை தெளிக்க வேண்டும். ஒரு லிட்டர் நீருக்கு 17 கிராம் மூரேட் ஆப் பொட்டாஷ் கலந்து பெறப்பட்ட ஒரு சதவீத கரைசலை விதைத்த 30, 45, 60–ம் நாட்களில் என 3 முறை தெளிக்க வேண்டும். இவ்வாறு இலைவழி ஊட்டம் அளிப்பதன் மூலம் மகசூலை அதிகரிக்கலாம்.

விதைத்த 45–ம் நாள் முதல் 2 நாட்களுக்கு ஒருமுறை அறுவடை செய்யலாம். 90 முதல் 100 நாட்களில் ஏக்கருக்கு ஆறு டன் வரை மகசூல் எடுக்கலாம். எனவே வெண்டை சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் முறையான சாகுபடி முறைகளை கடைபிடித்து நிறைவான மகசூல் பெற்று பயன் அடையலாம்.

# நீலம் புயலில் சேதமடைந்த வாழைகள்; அதிகாரிகள், விஞ்ஞானிகள் நேரில் ஆய்வு

**கரிக்கலாம்பாக்கம்**,

புதுவை மாநிலத்தில் நீலம் புயலினால் ஏற்பட்ட சேதங்களை, வேளாண் அறிவியல் நிலைய தலைவர் மற்றும் விஞ்ஞானிகள் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

## மழை சேதம்

புதுச்சேரி மாநிலத்தில் சமீபத்தில் ஏற்பட்ட நீலம் புயலால் விவசாய நிலங்களுக்கு ஏற்பட்ட சேதங்களை பார்வையிட்டு, விவசாயிகளுக்கு தகுந்த ஆலோசனைகளை வழங்க புதுவை வேளாண் அறிவியல் நிலையம் முடிவு செய்தது. அதைத்தொடர்ந்து அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் குழு நிலைய தலைவர் சுரேஷ், நிலைய முதல்வர் வசந்தகுமார் ஆகியோர் தலைமையில் தவளக்குப்பம், பூர்ணாங்குப்பம், அபிஷேகப்பாக்கம், திம்ம நாயக்கன் பாளையம் மற்றும் கரிக்கலாம்பாக்கம் ஆகிய இடங்களை பார்வையிட்டனர்.பூர்ணாங்குப்பம், தவளக்குப்பம் ஆகிய பகுதிகளில் சில நெல் வயல்கள் நீரில் மூழ்கியுள்ளன. நீர் வடிந்த பின் இவற்றிக்கு எந்தவித பாதிப்பும் இருக்காது.வாழைப்பயிரில் சுமார் 20 சதவீதத்தில் இருந்து 30 சதவீதம் வரை நீலம் புயலால் மரங்கள் சாய்ந்து விட்டன. அபிஷேகபாக்கத்தில் வாழை மரங்கள் 90 சதவீதம் சாய்ந்து இருந்தது. அதே நேரத்தில் சில வாழை வயல்கலில் சவுக்குகழி வைத்து முட்டு கொடுத்து இருந்த இடங்களில் வாழை மரங்கள் சாயவில்லை.எனவே வருங்காலங்களில் வாழை பயிருக்கு போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கையான இதுபோன்ற புயல், காற்று அறிவிக்கப்படும் நேரத்தில் முட்டு கொடுத்தல் அவசியம் செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.கரிக்கலாம்பாக்கம் கிராமத்தில் சொட்டு நீர்பாசனம் மூலம் பயிரிடப்பட்ட கரும்பு வயலையும் விஞ்ஞானிகள் குழு பார்வையிட்டது. கரும்பு பயிர் பலமான காற்றினால்

சற்றே சாய்ந்திருந்தன. இதற்கான பரிந்துரைகளை இக்குழு விவசாயிகளுக்கு எடுத்து கூறி உள்ளது.பொதுவாக வாழை மரங்கள்தான் இந்த புயல் காற்றில் பாதிக்கப்பட்டுள்ளது. ஒரு சில இடங்களில் மட்டும் நெற்பயிர் நீரில் மூழ்கியுள்ளன. வேறு ஏதேனும் பிரச்சினைகள் இருந்தாலோ அல்லது எந்தவிதமான ஆலோசனைகளுக்கும் தீர்வு காண வேளாண் அறிவியல் நிலையம் உள்ளது. மேலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தேவையான தொழில்நுட்ப உதவிகளை செய்வதற்கு வேளாண் அறிவியல் நிலையம் தயாராக உள்ளது. மேற்கண்ட தகவல்களை, புதுவை வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் குழு நிலைய தலைவர் சுரேஷ் தெரிவித்தார்.

## தினகரன்

# விஷமில்லா பூச்சிக்கொல்லிகள்

பூச்சிகளிடமிருந்து பயிர்களைக் காப்பாற்றத் தெளிக்கப்படும் பூச்சிக்கொல்லிகள் பூச்சிகளை மட்டும் அழிப்பதில்லை. மகரந்தச் சேர்க்கைக்கு உதவி செய்யும் தேனீக்கள் மற்றும் பறவைகள், பூச்சிகளை இயற்கையாகக் கொல்லும் தவளைகள், தேரைகளையும் அவை அழித்துவிடுகின்றன. பூச்சிக்கொல்லிகள் ஆபத்தான ரசாயனங்கள். இவற்றை தொடர்ந்து உட்கொள்ளும் பாலூட்டி விலங்குகளின் நோய் எதிர்ப்புத் திறன் குறைந்துவிடுவது நிரூபிக்கப்பட்டுள்ளது. மனிதனும் ஒரு பாலூட்டிதானே? பொதுவாக, புட்டிப்பாலை விட தாய்ப்பால் குடித்து வளரும் குழந்தைகள் ஆரோக்கியமாகவும் அதிக நோய் எதிர்ப்புத்திறனுடனும் காணப்படுவது இயற்கை.

இதற்கு மாறாக கனடாவில் இனுயிட் என்ற சமூகத்தில் தாய்ப்பால் குடித்து வளரும் குழந்தைகள் புட்டிப்பால் குடித்து வளரும் குழந்தைகளை விட குறைவான நோய் எதிர்ப்புத்

திறனைப் பெற்றுள்ளன என்று கண்டுபிடித்துள்ளார்கள். இதற்குக் காரணம் இன்றைய உணவில் கலந்துவிட்ட பூச்சிக்கொல்லிகள்தான். பூச்சிக்கொல்லி நஞ்சால் உலகில் வருடத்திற்கு 20 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர். ஆனால், இதனால் பலனிருக்கிறதா என்றால் ஏமாற்றம்தான். பூச்சிகளைக் கொல்வதற்கு 70 சதவீதம் ரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகளே பயன்படுத்தப்படுகின்றன. இருந்தாலும் அந்தப் பூச்சிக்கொல்லிகளைச் சமாளித்து உயிர் வாழும் அளவுக்கு 525 பூச்சி இனங்கள் தயாராகி விட்டன எனக் கண்டறியப்பட்டுள்ளது.

எனவேதான், விஷமில்லாத பூச்சிக்கொல்லிகளை நோக்கி அறிவியல் உலகம் நகர்ந்து கொண்டிருக்கிறது. பெண் வண்டுகளின் வாசனையை மோப்பம் பிடித்துத்தான் ஆண் வண்டுகள் பல மைல் தூரம் பறந்து வந்து இனச்சேர்க்கையில் ஈடுபடுகின்றன. பெண் பூச்சிகளிடம் சுரக்கும் அந்த வாசனைப் பொருளை எடுத்து பசை தடவிய பெட்டிக்குள் வைத்தால், வாசனையால் கவரப்பட்டு வரும் ஆண்பூச்சிகள் பசையில் ஒட்டிக்கொண்டு உயிர் துறப்பது உறுதி. இந்த வகையில் பூச்சிகளைக் கொல்லும் முறை தற்போது கடைப்பிடிக்கப்படுகிறது. பூச்சி இனம் பரவாமல் இருக்க மற்றொரு வழி, காமா கதிர்களை உபயோகிப்பது. ஆண் பூச்சிகள் மீது இந்தக் கதிர்களைப் பாயச்செய்து அவற்றை மலடாக்குகின்றனர். இதனால் ஆண் பூச்சிகள் பெண் பூச்சிகளுடன் இணைந்தாலும் அவற்றைக் கருத்தரிக்கச் செய்ய

முடியாது. இதனால் பூச்சி இனம் கட்டுக்குள் வைக்கப்படுகிறது.

பூச்சிகளால் பாதிக்கப்படாத வீரியம் மிக்க விதைகளை உற்பத்தி செய்து அவற்றைப் பயிர் செய்வதன் மூலம் பூச்சிகளால் ஏற்படும் தொல்லைகளைப் போக்குகிறார்கள். அல்ட்ரா சவுண்ட் மூலமும் சில வகை விளக்குகள் மூலமும் பூச்சிகளை வெறுப்பேற்றி, எரிச்சல் உண்டாக்கி, குறிப்பிட்ட பயிரை அந்தப் பூச்சிகள் நாடிவராமல் செய்யவும் வழிமுறைகள் இப்போது வந்துவிட்டன. பூச்சி களைக் கொல்லும் நுண் உயிரி களை வளர்த்து, பயிருக்கும் உயிருக்கும் பாதிப்பில்லாமல் அவற்றை வெகு எளிதில் கட்டுப்படுத்துவதற்கான ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. எப்படியோ... உணவு நஞ்சாகாமல் சீக்கிரம் தடுத்தால் சரி.

**தினமணி**

# வேளாண் பொருள்கள் பதனிட பயிற்சி

விவசாயிகள் மற்றும் படித்த இளைஞர்கள், சுய உதவிக் குழுவினருக்கு வேளாண் விளை பொருள்களை பதனிடும் தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

வேளாண் உற்பத்திக்குப் பின் விளை பொருள்களை பாதுகாக்க மேற்கொள்ள வேண்டிய தொழில்நுட்பங்களை விவசாயிகள் தெரிந்து கொள்ளாததால் பெருமளவில் தானிய இழப்பு ஏற்படுகிறது. இதற்கு, சரியான பயிற்சி பெற்றிருந்தால், தானியங்கள் மற்றும் காய்கனிகளை நீண்ட நாள்கள் பாதுகாத்து வைத்திருக்க முடியும்.

இதற்கான பயிற்சி, சென்னை பால்வள தொழில்நுட்பக் கல்லூரியில் டிசம்பர் 1-ம் தேதி முதல் 31-ம் தேதி வரை அளிக்கப்பட உள்ளது. இதில், அறுவடைக்குப்பின் தானியங்களை பதப்படுத்துதல், எலிகள் கட்டுப்பாடு, நவீன சேமிப்பு முறைகள், பயறு வகைகளை

பதப்படுத்துதல், மதிப்பு கூட்டப்பட்ட தானியங்கள் மற்றும் பயறு பொருள்கள் தயாரிப்பு, சோயா, பால் மற்றும் பன்னீர் தயாரிப்பு, காய்கறி பதப்படுத்துதல், பழப் பொருள்கள் மற்றும் மசாலா வகைகள் தயாரிப்பு தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்படும்.

பயிற்சியின்போது, தங்குமிடம், உணவு, பயிற்சிப் புத்தகம் ஆகியவை இலவசமாக வழங்கப்படும். ஆர்வமுள்ள விவசாயிகள், மகளிர் சுய உதவிக் குழுவினர், படித்த இளைஞர்கள் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

முதல்வர், பால்வள தொழில்நுட்பக் கல்லூரி, கொடுவள்ளி, அலமாதி அஞ்சல், செங்குன்றம் வழி, சென்னை–52. வரும் 15-ம் தேதிக்குள் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும். தொலைபேசி எண்கள்: 044-2768214, 9444155312, 9444810657.

பயிற்சி பெறுபவர்கள் 25-ம் தேதி தேர்வு செய்யப்படுவர்.

தமிழ்நாடு கால்நடை மற்றும் மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் செய்திக் குறிப்பில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.